## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 71. ஸ்ரீமான் கபீர் தாஸ் மஹராஜ்

காசியில் வாழ்ந்த மிக உயர்ந்த பக்தர் இவர். இவர் மூலம் அவர் வாழ்ந்த காலத்தில் குறிப்பாக மத வேற்றுமைகள் மிகவும் அதிகம் இருந்த சமயத்தில் இவரது ஆன்மீகப் பணியும் பக்தியும் சித்துக்களும் மக்களுக்குப் பல வழிகளில் நெறி காட்டின.

இவரைப் பெற்றோர் யார் என்று தெரியவில்லை.இவரைக் கண்டு எடுத்து வளர்த்தோர் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த தமால் மற்றும் ஜிஜ்ஜா பீபி.

மனைவி ஸ்ரீமதி.சுந்தரா.
மகன்: கமால்
குரு: ஸ்ரீராமானந்த் மஹராஜ்
முக்தி அடைந்த இடம்: மெக்கா
தொழில்: நெசவாளர்

**<u>இவர் மக்களுக்கு உணர்த்திய மிக முக்கிய ஆன்மீகக் கருத்துக்கள்:</u>**

* தெய்வங்கள் உருவத்திலும் பெயர்களிலும் வழிபாட்டு முறைகளிலும் மாறுபடலாம்.ஆனால் அவை அனைத்தும் ஒரே பூர்ண பரப்ரஹ்மத்தின் வெளிப்பாடே.

* தூய அன்பே இறைவனை உணரும் உன்னத வழி.

* தூய அன்பின் மூலம் சேவை வளர வேண்டும்.அதன் மூலம் தான் இறைவனை உணர முடியும்.

* அன்பர்களுக்கு முடிந்த அளவில் தன்னால் ஆன சுயநலமற்ற சேவைகள் செய்வது நலம்.

* லௌகீக வாழ்க்கைக்கு உரிய பொருளைக் கூடத் தேடுவதில் சக்தியைச் செலவிடமால் அதை முக்திக்குச் செலவிடுவர் மேன்மை மிகு அன்பர்கள்.

* ஆன்மீக நெறியை அனைவரும் உணரும் வண்ணம் கற்றுத் தர வேண்டும்.

* ஆன்மீக வாழ்க்கைக்கு உரிய நெறியைக் காட்டுவதற்கு உரிய உண்மையான குரு

அவசியம்.

* இறையருளால் கைகூடும் சித்துக்களை சமூஹ மேன்மைக்கு மட்டுமே அன்பர்கள் செலவிடுதல் வேண்டும்.

* சூஃபி முஸ்லிம் தத்துவத்தையும் வேத தத்துவங்களையும் [பாரதி போல] இணைத்து அவர் அழகிய எளிய ஆன்மீக வழிகளை உணர்த்தினார்.

* சுக ப்ரஹ்மரிஷியின் அடுத்த அவதாரம் என்று மக்கள் இவரைக் கொண்டாடுகின்றனர்.சுக மஹரிஷி மீது ஆசை கொண்ட ரம்பையே சுந்தரா என்று ஐதீஹம்.

* கண்மூடித் தனமான அனைத்து மதங்களின் சடங்குகளையும் கண்டித்தார்.

<u>பிறப்பு</u>:
இவரை யார் பெற்றது என்று தெரியவில்லை.காசியில் கங்கைக் கரையின் ஒரு சோலைப்பகுதியில் இவர் குழந்தையாக தமாலுக்குக் கிடைக்கப் பெற்றார். பல காலம் முதுமை வரை மக்கள் பேறு இல்லாமல் தவித்த தமால் - ஜிஜ்ஜாபீபி தம்பதிகளுக்கு ஒரு இஸ்லாமியச் சித்தரின் அருள் வாகின் படி இவர் கிடைத்தார்.

**<u>திறன்</u>**:
தனது மனதில் உள்ள எதையும் எளிய பாஷையில் பாடும் கவித்திறனை இவர் மிகச் சிறிய வயதிலேயே பெற்றார்.

**<u>வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள்</u>:**
* தான் முதன் முதலில் நெய்த பட்டுத்துண்டை காசி வீதிகளில் விற்க முயன்றார்.அப்போது அவரிடம் ஓர் அந்தணர் அதை இலவசமாக வேண்டினார்.அப்போது அதை எதிர்த்தார்.பின்னர் அதை இரண்டாகக் கிழித்து ஒன்றை அவருக்கும் ஒன்றை வ்ருந்தாவன க்ருஷ்ணனுக்கும் சமர்ப்பித்தார்.

* ஸ்ரீராமனின் வாழ்க்கைத் தத்வத்தை முற்றிலும் உணர்ந்தார்.ஸ்ரீராமனின் ப்ரஹ்ம தத்துவத்தை நாம ஜெபம் மூலம் பரப்பினார்.அதையே பின்னர் காந்தி பின்பற்றினார்.

* உருவ வழிபாட்டின் மூலம் மனதை ஆன்மீக வழியில் நுழைந்து உருவற்ற ப்ரஹ்ம தத்துவத்தை உணர வேண்டும் என்று அவர் உணர்ந்தார்.அதை

விஸ்வநாதரே ஒரு அந்தணர் மூலமாக உணர்த்தினார்.

* **குருவருள் பெற்ற மெய்மையாளர்**
ஸ்ரீராமானந்தரை உற்ற குருவாக வரிக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை.இவருக்கு மத வேற்றுமை என்ற கர்வம் போகிறதா என்று சோதிக்க குரு எண்ணினார்.அப்போது கங்கைக் கரைப் படிகளில் இவர் படுத்துக் கொள்ள, இவரை இடறிவிட்டது ராமானந்தரின் கால்கள்.குருவின் கால்கள் தன் மீது பட்டதையே இவர் தீக்ஷையாகக் கருதி ஸ்ரீராம ஜெபத்தைத் துவக்கி அவரது அன்பைப் பெற்றார்.

* **இறைவனின் அளித்த தரிசனம்**
நூலைக் கொண்டு நெய்கையில் பாவ பக்தியில் லயித்து சமாதி நிலையை அடையும் போதெல்லாம் வீட்டார் காண, தறியின் உட்சக்தியாய் உள்ள ஈசன் தானே துணிகளை நெய்வது வழக்கம்.

மேலும் நூலுக்கு உரிய சாயத்தையும் ஈசனே இட்டு இவரது சமாதி நிலை பாதிக்காமல் பார்த்துக் கொள்வதும் வழக்கம்.

**அடியார் சேவையில் த்யாகம்**
காசியில் மஹாசிவாத்ரியின் போது நூறு அன்பர்களுக்கு அன்ன தானம் செய்யும் நிலை ஏற்பட, பொருள் இல்லாத அவர் தன் மனைவியின் ஆலோசனையைக் கேட்டு, அவ்வூரில் அவள் மீது காமம் கொண்ட ஒரு மளிகைக்கடைக்காரனுக்கு மனைவியை அழைத்துச் சென்று விட்டு விட்டு பொருட்கள் வாங்கி வர, அவன் மனம் மாறினான்.இதன் மூலம் மனைவி மீதுள்ள பற்றையும், கணவன் மீதுள்ள பற்றையும் தம்பதியினர் விட்டனர்.

**மகப்பற்றை அறுத்தல்**
பக்ரித் பண்டிகைக்கு அன்ன தானம் செய்யும் பொருட்டு ஒரு மஹா கருமியின் கடையில் இவரும் இவரது மகனும் திருடும் வினையை மேற்கொண்டனர்.அப்போது பிடிபட்ட மகன் கொலை செய்யப்பட்டான்.அதை இவர் ஏற்றுக் கொள்கிறார்.இதன் மூலம் பிள்ளைப் பாசத்தையும் இவர் அறுக்கிறார்.

மச்சேந்திரரின் மாணவர் கோரக்கரும் இவரும் காசியில் ஆன்மீகக் கருத்துக்களை மக்கள் முன் பல முறை விவாதமும் பட்டிமன்றமும் செய்து உள்ளனர்.

காசியில் மிகவும் தாழ்ந்த சாதி மனிதன் ஒருவனுக்கு ஸ்ரீராம - ஸ்ரீக்ருஷ்ண தாரக

மந்த்ரங்களை உபதேசித்து முக்திக்கு வழி காட்டினார்.

மிகவும் எளிய வாழ்வின் மூலம் நேரத்தையும் காலத்தையும் சக்தியையும் இறைவனை அடைவதில் செலவிடலாம் என்று உணர்த்தினார்.

ஹரி ஓம்!